# Revised

**செ.வெ. எண்: 369** **நாள்: 26–06–2012**

## செய்தி வெளியீடு

உடலை உறுதியாக்கி, நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வத்தை அனைவரும் பெறும் வண்ணம் மக்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்கப்படவேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம்; டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு திட்டத்தின் கீழ் 12000 ரூபாய் வழங்குதல்; கிராமப்புற பெண்களுக்கு சானிடரி நாப்கின்கள் வழங்கும் திட்டம்; அரசு மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிலையங்களில் சிறந்த மருத்துவ சேவை வழங்குதல்; என பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

இதேபோன்று, பொது மக்களுக்கு பல் பராமரிப்பின் அவசியத்தை உணர்த்தும் வகையில், பல் சம்பந்தமாக ஏற்படும் நோய்களை குணப்படுத்துவதற்காக ஒவ்வொரு அரசு மருத்துவமனைகளிலும் அரசால் ஒரு பல் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கிராமப்புற மக்களின் வசதிக்காக 22 வட்டம் சாரா மருத்துவமனைகள் மற்றும் 208 ஆரம்ப சுகாதார நிலையங்களில் வாரத்திற்கு மூன்று நாட்கள் பல் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது மட்டுமல்லாமல், பொதுமக்களின் நலன் கருதி, நவீன வசதிகளுடன் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட சென்னையிலுள்ள அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையை ஒப்புயர்வு மையமாக அதாவது Centre of Excellence in Dentistry ஆக தரம் உயர்த்த 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வகையில், பல் மருத்துவமனைகளை நவீனப்படுத்தும் வகையிலும், அதிக மக்களுக்கு விரைந்து சிகிச்சை அளிப்பதற்கு வசதியாகவும் சென்னையிலுள்ள அரசு பல் மருத்துவமனைக்கு 1 கோடியே 24 லட்சத்து **75 ஆயிரம்** ரூபாய் செலவில் மின்சாரத்தால் இயங்கும் 149 பல் சிகிச்சை நாற்காலிகள் வாங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம் மக்கள் நவீன பல் சிகிச்சை வசதியை பெற இயலும்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 26-6-2012